

# மருத்துவக் காப்புறுதி தொடர்பாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

# 1.

## மருத்துவக் காப்புறுதி என்றால் என்ன?



மருத்துவக் காப்புறுதியைப் பெற்றிருக்கும் போது, உங்களுக்கு ஏற்படும் எதிர்பாராத விபத்து, நோய், இயலாமல் போகும் போது அல்லது வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படும் போது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக செல்லும் போது வைத்திய சிகிச்சைக்கான செலவு மற்றும் வைத்தியசாலைக் கட்டணம் என்பன உங்களால் பெறப்பட்ட மருத்துவக் காப்புறுதியின் கீழ் செலவு காப்புறுதி நிறுவனத்தினால் திருப்பிச் செலுத்தப்படும். ஏனைய காப்புறுதி போலவே மருத்துவக் காப்புறுதியும் காப்புறுதி நிறுவனம் மற்றும் தனிநபர் அல்லது குழுக்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தமாகும். ஒரு குறிப்பிட்ட தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதிப் பூட்கையில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் மருத்துவ செலவுக்காக மேற்கொள்ளப்படும் செலவு காப்புறுதி நிறுவனத்தினால் திருப்பிச் செலுத்தப்படும். பொதுவாக மருத்துவக் காப்புறுதியின் காலம் ஒரு வருடமாகும். எனினும் ஆயுட் காப்பறுதியுடன் தொடர்புபடுத்தி மருத்துவக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் போது அந்தக் காலம் வேறுபடும்.

# 2.

## மருத்துவக் காப்புறுதியின் முக்கியத்துவம் என்ன?




வைத்தியசாலைக்குச் செல்லும் போது அல்லது அசாதாரணமான நோய் மற்றும் திடீர் ஆபத்துகளின் போது எதிர்கொள்ள நேரும் அவசரமான மற்றும் எதிர்பாரச் செலவு மருத்துவக் காப்புறுதியின் ஊடாக குறைப்பதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் உள்ளது. சுகாதார காப்புறுதியொன்று இல்லாவிட்டால் அவ்வாறன செலவுகளை உங்கள் சேமிப்பில் இருந்து அல்லது கடன் பெற்று தீர்க்க வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன், கிடைக்கும் பூட்கையின் தன்மைக்கு அமைவாக, நோய் நிவாரண சிகிச்சை, வைத்திய பரிசோதனைச் செலவு மற்றும் வைத்தியசாலைக் கட்டணம் என்பவற்றை உள்ளடக்குவதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் உள்ளது. அதேபோல், குடும்பத்திற்கு அல்லது தங்களின் கீழ் உள்ள ஊழியர்களுக்கு மருத்துவக் காப்புறுதியின் கீழ் பாதுகாப்பினை வழங்க முடியும்.

> **“அவசர மற்றும் எதிர்பார்க்காத செலவினை சுகாதாரக் காப்புறுதிப்பூட்கை மூலம் மீளளிப்பு செய்யவதற்கு உங்களால் இயலுமாகும்.”**

# 3.

## சந்தையில் உள்ள மருத்துவக் காப்புறுதிகளின் மூலம் காப்பீடு செய்யப்படுபவை எவை?



இலங்கையில் உள்ள அநேக மருத்துவக் காப்புறுதியின் ஊடாக அவசர விபத்தின் போது, நோயின் போது இயலாமல் போகும் போது அல்லது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது ஏற்படும் செலவுகள் தீர்த்து வைக்கப்படும். இதன் போது காப்புறுதிதாரரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதிப் பூட்கையின் பெறுமதியின் கீழ் மற்றும் அதன் நிபந்தனைகளுக்கு அமைவாக, கொடுப்பனவு மேற்கொளளப்படும். உங்களால் மேற்கொள்ளப்படும் பொதுவான மருத்துவ பரிசோதனைகளுக்கான (Routine Health Checkups) செலவு பெரும்பாலும் **காப்புறுதிக்குள் அடங்குவதில்லை.** அதனால் உங்கள் காப்புறுதிப் பூட்கையை நன்றாக வாசித்து பொது மருத்துவப் பரிசோதனைகள் உள்ளடங்குகின்றதா என்பதை தெரிந்துகொள்ளுதல் மிக முக்கியமானதாகும்.

# 4.

## உங்களுக்கு அவசியமான மிகப் பொருத்தமான மருத்துவக் காப்புறுதியை எவ்வாறு தேர்ந்தெடுப்பது?




சந்தையில் காணப்படும் பல்வேறுபட்ட காப்புறுதி வகைகள் தொடர்பாக சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக உங்கள் தேவைக்குப் பொருந்துகின்ற காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதுடன் உங்களுக்குப் பொருந்தாத காப்புறுதியைப் பெற்றுக்கொண்டு தேவையற்ற செலவை மேற்கொள்வதில் இருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். இதற்காக தகைமை பெற்ற காப்புறுதி முகவர் அல்லது ஆலோசனையாளர் அல்லது காப்பறுதித் தரகர் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக தவணைக் கட்டணத்திற்குப் பொருத்தமான காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியும். **அதேபோல் கடுமையான/ இயலாத நோய்கள் (Critical illness) தொடர்பாக காப்புறுதிப்பூட்கை காப்பீடு செய்யும் மற்றும் காப்பீடு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பாக நன்றாக விசாரித்தல் வேண்டும்.**

5.

## “முன்பே இருக்கும் நோய் நிலை” இருந்தால் என்ன நடக்கும்?




ஒருவர் மருத்துவக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் இருக்கும் நோய்கள் (நீரிழிவு, இருதய நோய்கள் அல்லது புற்றுநோய் போன்றன) “முன்பே இருக்கும் நோய் நிலை” (pre-existing conditions) என அழைக்கப்படும். இவற்றினை வெளிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு இருக்கும் நோய்களுக்கு ஏற்படும் செலவுகளுக்கு பொதுவாக காப்புறுதிக் காப்பீடு வழங்கப்படுவதில்லை. எனினும் பெற்றுக்கொள்ளப்படும் பூட்கையின் தன்மைக்கு அமைவாகவும் உரிய நிபந்தனைகளுக்கு அமைவாகவும், ஒரு குறிப்பிட்ட காத்திருக்கும் காலத்தின் (waiting) பின்னர் இருந்து காணப்படும் நோய்களுக்குக் காப்பீட்டினை வழங்குதல் சில காப்புறுதி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

# 6.

## மருத்துவக் காப்புறுதியின் தவணைக் கட்டணத்தை தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?




குறைந்த வயதுடையவர்களைக் காட்டிலும் வயது வந்தவர்களுக்கு நோய்கள் வருவதற்கான சந்தர்ப்பம் அதிகமென்பதனால், வயது அதிகமாகும் போது மருத்துவக் காப்பறுதியின் தவணைக் கட்டணமும் அதிகரிக்கும். அதனால், காப்புறுதிதாரரின் **வயது** தவணைக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் முக்கிய விடயமாக அமைகின்றது. அதேபோல் காப்புறுதிதாரரின் மற்றும் அவரின் குடும்பத்தின் **நோய் வரலாறு** என்பன தவணைக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் இன்னுமொரு முக்கிய விடயமாக அமைகின்றது. முன்னர் கோரப்பட்ட கோரிக்கைக்கான வரலாறும் கவனத்தில் கொள்ளப்படும். நோய் தொடர்பாக வரலாறு ஏதும் இல்லாவிடில், தவணைக் கட்டணம் கணிசமான அளவில் குறையும். அந்தந்த காப்புறுதி நிறுவனங்களின் கொள்கை மற்றும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் காப்புறுதியின் தன்மைக்கு அமைவாக, அந்தக் காப்புறுதியை புதுப்பிக்கும் போது கொடுப்பனவு செய்ய வேண்டிய தவணைக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் போது **"கோரிக்கை மேற்கொள்ளப்படாத வருடம்"** (Claim free years) எண்ணிக்கை முக்கிய விடயமாக இருப்பதுடன், ஒரு குறிப்பிட்ட வீதத்தைக் குறைப்பதற்கு காப்புறுதி நிறுவனம் சம்மதிக்கக்கூடும்.

# 7.

## வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது மருத்துவக் காப்புறுதி நன்மையினைப் பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலையில் இருக்க வேண்டிய மிகக் குறைந்த நேரம் உள்ளதா?

பொதுவாக இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்குக் குறைந்தபட்சம் 24 மணித்தியாலங்கள் வைத்தியசாலையில் தங்கியிருத்தல் வேண்டும். எனினும் இந்தக் காலமானது ஆபத்தினால் ஏற்படக்கூடிய சேதம் மற்றும் சில சிகிச்சைகளுக்கு பொருந்த மாட்டாது. அதனால், உங்கள் மருத்துவ காப்புறுதியை நன்றாக வாசித்து வைத்தியசாலையில் தங்கியிருக்க வேண்டிய மிகக் குறைந்த காலம் தொடர்பான நிபந்தனையை சரியாக விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

# 8.

## நீங்கள் மருத்துவக் காப்புறுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

- பாரதூரமான/ இயலாத நோய்களுக்கு உரிய காப்புறுதி மற்றும் அனுமதித்தல்.
- காப்புறுதிப் பூட்கையினால் காப்புறுதி செய்யப்படும் நோய்கள் மற்றும் காப்புறுதி செய்யப்படாத நோய்கள் பற்றிய விபரங்கள்
- காப்புறுதிப் பூட்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நியதிகள்
- காப்புறுதிப் பூட்கையில் குறிப்பிட்ட கட்டாய கால வரையறை மற்றும் அதன் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் (இந்தக் காலத்தினுள் காப்புறுதிப் பூட்கையில் குறிப்பிடப்பட்ட அனைத்து அல்லது சில காப்புறுதி நன்மைகள் உரிமையாளருக்கு கிடைக்கமாட்டாது)
- கோரிக்கை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடுகள்
- காப்புறுதி நன்மைகளை வழங்குவதில் காணப்படும் ஏதேனும் வரையறை

# மருத்துவக் காப்புறுதியின் மூலம் காப்பீடு செய்யப்படாத விடயங்கள்

# 9.





- யுத்த செயற்பாடுகள், கலவரம், சிவில் குழப்பம் அல்லது ஏதாவது வகையிலான பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது பங்குபற்றுதல் போன்றவற்றின் போது காயம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் செலவுகள்.
- தற்கொலைக்கு முயற்சி செய்தல் அல்லது தன்னால் மேற்கொள்ளப்படும் சேதங்கள், குடிப்பழக்கத்திற்கு அடிமையாதல், போதைப் பொருட்களுக்கு அடிமையாதல், பால்வினை நோய்கள் மற்றும் அது போன்ற நிலமைகளால் ஏற்படும் செலவுகள்
- விபத்தினால் ஏற்படும் சேதத்தினால் பற் சிகிச்சை மற்றும் சத்திரசிகிச்சை தவிர்த்து ஏனைய பல் சார்ந்த வைத்திய சிகிச்சைகளுக்கான செலவுகள்
- மூக்குக் கண்ணாடி, வில்லை அல்லது காது கேட்கும் கருவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான செலவுகள்
- விபத்தினால் ஏற்படும் சேதத்திற்கு அவசியமான முகக் கட்டமைப்புத் திருத்தம் அல்லது பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை தவிர்ந்த முகக் கட்டமைப்புத் திருத்தம் அல்லது பிளாஸ்டிக் சத்திர சிகிச்சைகளுக்கான செலவுகள்.
- முன்னரே இருந்து வரும் நோய்க்கான செலவுகள்

மேலே குறிப்பிட்டவை மருத்துவக் காப்புறுதியின் கீழ் உட்படாத பிரதான சில விடயங்களாவதுடன், நீங்கள் பெற்றுக்கொள்ளும் காப்புறுதிப் பூட்கைப் பத்திரத்தில் காப்பீடு செய்யப்படாத விடயங்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

# இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை மேற்கொள்ளும் முறை



10.

## காப்புறுதி தொடர்பான முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் காப்புறுதிதாரரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவதுடன், அதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலில் உங்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினைச் சமர்ப்பியுங்கள். காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் வழிமுறையை அறிந்து கொள்வதற்கு https://ircsl.gov.lk/list-of-insurance-companies/ எனும் இணைய முகவரியில் உள் நுழையுங்கள். நிறுவனம் நியாயமான காலப்பகுதியினுள் அதனைத் தீர்த்து, அது தொடர்பான பதிலை வழங்குதல் வேண்டும்.

உங்களுக்கு காப்புறுதி நிறுவனத்தினால் நியாயமான காலப்பகுதியினுள் பதில் கிடைக்காவிடில் அல்லது முறைப்பாடு தீர்க்கப்பட்ட முறை தொடர்பாக நீங்கள் திருப்தியடையாவிடில், உங்கள் முறைப்பாட்டினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு சமர்ப்பிக்க முடியும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் முறைதொடர்பான மேலதிக தகவல்களுக்கு https://ircsl.gov.lk/policyholder-complaints/ எனும் இணைய முகவரியில் நுழையவும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக காப்புறுதிப்பூட்கையொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக இந்த கையேடு வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் பொதுவான தகவல்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. இதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் காப்புறுதி பூட்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பதிலீடுசெய்ய அல்லது இரத்துசெய்யமாட்டது. காப்புறுதிப் பத்திரம் தொடர்பாக சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனம், காப்புறுதி தரகர் நிறுவனம் அல்லது காப்புறுதி முகவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி - 0112 2396184-9 | பக்ஸ் - 0112 2396190
மின்னஞ்சல் - mder@ircsl.gov.lk

www.ircsl.gov.lk

https://www.facebook.com/Ircslofficialpage/

https://www.linkedin.com/in/insurance-regulatory-commision-of-sri-lanka-980722209/

https://www.youtube.com/channel/UCuM9RLGQTi7B2MM7PL7jfiA

பொறுப்பு மற்றும் துறப்பு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த கைநூல் அச்சிடப்பட்டுள்ளதுடன், எந்தவிதமான சட்ட ஆலோசனைகளையும் வழங்குவதற்கு பதிலீடாக இதனைப் பயன்படுத்துதல் கூடாது.